தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநர்(பணியாளர் தொகுதி) செயல்முறைகள்
சென்னை 600 006
ந.க.எண். 128357/சி3/இ1/2008, நாள். 27.04.2011
=====

பொருள் தமிழ்நாடு பள்ளிக் கல்வி சார்நிலைப்பணி – புதிய நியமனங்கள் – ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் 2008 மற்றும் 2009ம் ஆண்டுகளில் ஆங்கில பாட பட்டதாரி ஆசிரியர்களாக தேர்வு செய்யப்பட்டு நியமனம் செய்யப்பட்டவர்கள் முறையான நியமனமாக முறைப்படுத்தி ஆணை வழங்குதல் – சார்பு.

பார்வை சென்னை 6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி) அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.128357/சி3/இ1/2008, நாள் 28.12.2008, 13.2.2009, 27.2.2009, 1.4.2009, 27.4.2009, 6.6.2009, 20.6.09, 29.6.2009, 16.7.2009, 17.7.2009 மற்றும் 4.12.2009.

===

2008 மற்றும் 2009ம் ஆண்டுகளில் ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் ஆங்கிலப்பாட பட்டதாரி ஆசிரியர்களாக தேர்வு செய்யப்பட்டு, பார்வையில் காணும் இவ்வலுவலக செயல்முறைகள் மூலம் வழங்கப்பட்ட நியமனங்கள் அனைத்தும் அவ்வாசிரியர்கள் பணியில் சேர்ந்த நாள் முதல் முறையான நியமனமாக முறைப்படுத்தி ஆணை வழங்கப்படுகிறது.

ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் தேர்வு செய்யப்பட்டு நியமனம் செய்யப்பட்டுள்ள மேற்படி ஆசிரியர்களுக்கு தனியாக பணிவரன்முறை செய்ய வேண்டிய அவசியமில்லை எனவும் தெரிவிக்கலாகிறது.

இச்செயல்முறைகளின் நகல்களை தங்கள் ஆளுகையின் கீழ் உள்ள சார்ந்த பள்ளிகளுக்கு அனுப்பிவைப்பதோடு சம்பந்தப்பட்ட ஆசிரியர்களின் பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகளை செய்யும்படி சம்பந்தப்பட்ட பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு அறிவுறுத்துமாறும் அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

ஒ.ம்/– வி.சி.இராமேஸ்வரமுருகன்
இணை இயக்குநர்(பணியாளர் தொகுதி)

பெறுநர்
அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்.